திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, எங்கள் பார்ட்டி பொசிசனை மட்டும் இந்தப் பிரச்னையில் இப்போது க்ளியர் செய்ய விரும்புகிறேன். ஏனென்றால், அவை முன்னவர் சொன்னார், நாங்கள் ஓய்வு பெற்ற நீதிபதி அமைத்து இருப்பதை நீங்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லி இருப்பதால், இந்த மன்றம் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருப்பதால், எங்கள் பார்ட்டி பொசிசனை சொல்கிறேன். அந்த டர்ம்ஸ்ஸை இங்கே அவை முன்னவர் வைத்து இருக்கிறார். அதைப் பொறுத்த வரையில் ஏற்றுக் கொள்வதும், கொள்ளாததும் வக்கீல்கள் சங்கத்தில் இருக்கக் கூடியவர்கள் எடுக்கும் முடிவு தான், அவர்களுடைய உரிமை தான், எங்களைப் பொறுத்த வரையில் அதை ஆதரிக்கவோ, எதிர்க்கவோ இல்லை. அவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்களோ அந்த முடிவை சப்போர்ட் செய்ய நாங்கள் இருப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 26—3—1979 அன்று. . .

திரு. ஜே. ஜேமஸ்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜேம்ஸ், இப்படி நீங்கள் எழுந்து பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி பேசிக் கொண்டு இருந்தால், மற்ற உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையின் கவனத்திற்கும், ஒப்புதலுக்கும் ஒரு அறிக்கையை வைத்தார்கள். நான் என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு உமாநாத் அவர்கள் கூறியது போல், இந்த அரசு எடுத்துக் கொண்ட முடிவு ஏற்றுக் கொள்வது என்பது வக்கீல்கள் சங்கம் செய்ய வேண்டிய முடிவு. எங்களைப் பொறுத்த வரையில் சர்வீசில் இருக்கும் நீதிபதி கொண்டு விசாரிக்க வேண்டும். அந்த போலீஸ் அதிகாரி சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்து இருக்கிறோம். சுமுகமாக இந்தப் பிரச்னை தீர்க்க வேண்டுமானால் . . . . (மணியடிக்கப் பட்டது)

2. உரிமைப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

(ஆ) தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று 26—3—79 அன்று திரு. உமாநாத் அவர்கள் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மீது ஒரு உரிமை மீறல் பிரச்னையை எழுப்பினார்கள்

1979 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய விளக்கத்தை இன்று அளிப்பதாகக் கூறினார்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள். ....

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, டி. வி. எஸ். குரூப் தொழிற் பிரச்சினை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் முன்பாக தொழிலாளர்கள் பிரதிநிதிகளும், நிர்வாகத்தின் பிரதிநிதிகளும் 1977 ஆகஸ்ட் மாதத்தில் ஒரு ஏற்பாட்டிற்கு (அக்கார்ட்) வந்தார்கள். இந்த ஏற்பாடு தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் ஏற்பட்ட உடன்பாடு இல்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மேற்படி ஏற்பாட்டின்படி தொழிலாளர்களும், நிர்வாகமும் ஒத்துழைத்து ஒழுங்குமுறையையும் உற்பத்தி அளவையும் தொடர்ந்து கடைபிடிக்க ஏற்றுக் கொண்டனர். அதன்படி தொழிற்சாலைகள் திறக்கப்பட்டன. ஆனால் தொழிலாளர்கள் ஒழுங்கின்மையிலும் (இன்டிசிப்பிளின்), மெத்தன போக்கிலும் (கோ ஸ்லோ) ஈடுபட்டமையால் நிர்வாகத்தினர் கதவடைப்பு செய்தனர். இதைப் பற்றித்தான் நான் 8—3—1979 அன்று தொழிலாளர் பிரதிநிதிகளும் கையாளவில்லை—முதலாளிகளும் கையாளவில்லை அவரவர்கள் பாதையில் சென்று விட்டார்கள் எனக் கூறினேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

20—3—1978 அன்று பேசும்போது 1977 அக்டோபர் மாதத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிக் குறிப்பிட்டேன். முதல் அமைச்சர் முன்பு நடந்த பேச்சு வார்த்தைகளின் விளைவாக நிர்வாகத்தினர் 26—10—1977 அன்றும் 30—10—77 அன்றும் ஒரு மாதிரி உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் சில தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறி நிர்வாகம் மேற்படி உடன்படிக்கைக்குக் கொடுத்த சம்மதத்தை திரும்பப் பெற்றனர். இதைத்தான் நான் It is immoral, but it is not illegal என்று குறிப்பிட்டேன்.எனவே. உண்மைக்குப் புறம்பான ஏதும்இந்த அவைமுன் சொல்லவில்லை ஆகவே, உரிமைப் பிரச் னைக்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பிரச்னை மீதான தீர்ப்பு பின்னால் அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.